## 3.2 குறை பயன்பாட்டுடைய வளங்கள்

| | கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயற்திட்ட காலப்பகுதியின் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 921.28 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7.05 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 874.50 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 5.54 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், உலகளாவிய நிதியத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்ட ரூபா 16.33 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 320,364 பயன்படுத்தப்படாத மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பொது திறைசேரியில் எஞ்சியிருத்தது. | உத்தேசித்த நன்மைகள் அக்கறையுடைய தரப்பினரை அடையாமல் போகலாம். | கருத்து தெரிவிக்கவில்லை. | உத்தேசித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், ரூபா 35.12 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 216,122 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் பூர்த்தி செய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்ட நுண்ணோக்கிகளின் பெறுகை, தகவல், கல்வி, மற்றும் தொடர்பாடல் நோக்கங்களுக்கான பொருட்களின் வழங்கல் முதலியனவற்றை உள்ளடக்கும் 08 நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கருத்து தெரிவிக்கவில்லை. | -மேற்படி- |

